# தபோவனம்







**26 & 27 ஆடி 2025 நடைபெற்ற நிகழ்வுகள்**

# (26.7.2025) சனிக்கிழமை நிகழ்வுகள்

- **சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உருவாக்குவதற்கான நடவடிக்கைகள்:** மாசுபாடு மற்றும் கழிவு மேலாண்மை - கடற்கரை சுத்தம் செய்யும் பணி

காலை 9 – 9.30 கடற்கரையை சுத்தம் செய்தல்.








## ➢ சிறுவர்களின் விளையாட்டுக்கள்

காலை 9.30 – 11 வசதிபடுத்துனர்களின் துணையுடன் கரம் விளையாட்டு, காற்பந்து, வலைப்பந்து விளையாட்டுக்களை விளையாடினார்கள்.








## ➢நீச்சல் பயிற்சி

காலை 9.30 –11.45 சமுத்திரவியல் பல்கலைகழக பயிற்றுவிப்பாளர் திரு கிறிஸ்து ராஜா வால் வசதிபடுத்துனர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் சமுத்திரவியல் பல்கலைகழக மாணவர்களுக்கான நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டது. அதே நேரம், சிறுவர்களும் கடற்கரையில் விளையாடினார்கள்.








## ➢ சத்துணவு

காலை 11.45 சகலருக்கும் சத்துணவாக முளை கட்டிய தானிய சத்துமா மற்றும் நெல்லி பழரசமும் பரிமாறப்பட்டது.

## ➢ சிறுவர்களின் செயற்பாடுகள்

கடற்கரையில் விளையாடும் போது சிறுவர்களால் நண்டுகள் பிடிக்கப்பட்டன. அதனை அவர்கள் அவித்து உண்டார்கள்.









## ➢ மருத்துவ பீட மாணவர்களின் பொழுதுபோக்கு

மாலை 5.30 – 8 யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் 44 வது பிரிவு மாணவர்கள் தபோவனத்திற்கு வருகை தந்து தபோவனத்தில் மற்றும் கடற்கரையில் தமது நேரத்தை மகிழ்ச்சியாக கழித்தனர். குழுவாக இணைந்து பாட்டுப்பாடினர். மாணவர்கள் அவர்களது விடுதியில் உணவு சமைத்து தபோவனத்திற்கு கொண்டு வந்து உண்டு மகிழ்ந்தனர்.



- மருத்துவ பீட மாணவன் ஸ்ரீரமணன் என்பவரால் "*விடை கொடு எங்கள் நாடே கடல் வாசல் தெளிக்கும் வீடே*" என்ற பாடல் பாடப்பட்டது



# (27.7.2025) ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள்

## ➢பியானோ வகுப்புக்கள்

மாலை 4.30 – 5.30 தபோவன சிறுவர்களுக்கான பியானோ வகுப்புக்கள் அல்லைப்பிட்டி ஆசிரியர் செல்வி. நிசாலினி என்பவரால் பயிற்றுவிக்கப்பட்டது. 10 – 22 வயதிற்குட்பட்ட ஒரு ஆர்வமுள்ள மாணவர் மட்டுமே பங்குபற்றினார். ஏனைய மாணவர்கள் சில அர்ப்பணிப்புகள் காரணமாக வருகைதர முடியவில்லை.



# நன்றி

